Regional Bulletin / Puducherry / Tamil Script / 19.05-2024

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்ணா காசிம்

தேதி : 19.05.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாளை நடைபெற உள்ள 5 ஆம் கட்ட வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

6 ஆம் கட்ட தேர்தல் 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 58 தொகுதிகளில் இம்மாதம் 25 ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், அம்மாநிலங்களில் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது.

வரும் 2024 மக்களவை தேர்தல் நாட்டின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் வலுப்படுத்துவதாக அமையும் என்று பிரதமரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவை தேர்தல் சோதனையின் போது, கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் பணத்தின் மதிப்பு, 9 ஆயிரம் கோடியை எட்டும் நிலையில் உள்ளது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

5 ஆம் கட்ட தேர்தல் 1(16)

7 கட்டங்களாக நடைபெறும் மக்களவை தேர்தலில், இதுவரை, தமிழகம், கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் 4 கட்டங்களாக வாக்குப்பதிவு முடிவடைந்துள்ளது. இதனிடையே, நாளை நடைபெற உள்ள 5 ஆம் கட்ட வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. 5 ஆம் கட்ட தேர்தலில் 6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 49 மக்களவை தொகுதியில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்த கட்டத்தில், உத்திரபிரதேசத்தில் 14 இடங்களிலும், மகாராஷ்டிராவில் 13 இடங்களிலும், மேற்கு வங்க மாநிலத்தில் 7 இடங்களிலும், ஒடிசா மற்றும் பீகாரில் தலா 5 இடங்களிலும், ஜார்கண்டில் 3 இடங்களிலும், ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக்கில் தலா ஒரு இடத்திற்கும் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலில் 94 ஆயிரத்து 732 வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. இதில் 9 லட்சத்து 47 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேர்தல் அலுவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். 5 ஆம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணிக்கு முடிவடையும்.

5 ஆம் கட்ட தேர்தல் 2(11)

இந்த 5 ஆம் கட்ட தேர்தலுடன் ஒடிசா சட்டப்பேரவையின் 35 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. 2024 பொதுத்தேர்தலின் முதல் 4 கட்டங்களில் 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 379 நாடாளுமன்ற தொகுதிகளில் இதுவரை வாக்குப்பதிவு சுமுகமாகவும், அமைதியாகவும் முடிவடைந்துள்ளது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்துள்ளது. நாளை நடைபெறும் தேர்தலில், மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு பியூஷ் கோயல், திருமதி ஸ்மிருதி இரானி, காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்ட தலைவர்கள் களத்தில் உள்ளனர்.

6 ஆம் கட்டதேர்தல் (13)

இதனிடையே, 6 ஆம் கட்ட வாக்குப்பதிவு 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 58 தொகுதிகளில் இம்மாதம் 25 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் நடைபெற உள்ள மாநிலங்களில் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது. முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். பிரதமரும் பாஜக

மூத்த தலைவர்களில் ஒருவரான திரு நரேந்திர மோடி இன்று மேற்கு வங்க மாநிலம், புருலியா மக்களவை தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர், வரும் ஜூன் 4 ஆம் தேதிக்கு பிறகு பாஜக ஆட்சி அமைக்கும் என்றும், ஊழல்வாதிகள் அனைவரும் சிறைக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் தெரிவித்தார். எஸ்சி-எஸ்டி, தலித்துகள் மீது திரிணாமுல் காங்கிரஸ் அரசுக்கு அக்கறை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். மத்தியில் திரிணாமுல் காங்கிரசும், காங்கிரசும் ஆட்சிக்கு வந்தால், இடஒதுக்கீட்டை பறித்து விடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையம் (15)

மக்களவை தேர்தல் சோதனையின் போது, கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் பணத்தின் மதிப்பு, 9 ஆயிரம் கோடியை எட்டும் நிலையில் உள்ளது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்க தேர்தல் ஆணையம் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கை காரணமாக ரொக்கமாக இதுவரை, 849 கோடியே 15 லட்சம் ரூபாய் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

சுமார் ஆயிரத்து 60 கோடி ரூபாய் மதிப்பிலான தங்கமும், 2 ஆயிரத்து 8 கோடி ரூபாய் மதிப்பிலான பரிசுப் பொருட்களும், சுமார் 814 கோடி ரூபாய் அளவிற்கு மதுபானங்களும், 3 ஆயிரத்து தொள்ளாயிரத்து 58 கோடி ரூபாய் அளவிற்கு போதை பொருட்களும் கைப்பற்றப் பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதில் பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்களில் போதை பொருட்களின் மதிப்பு மட்டும் 45 சதவிகிதம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோடி ஜார்கண்ட் (7)

வரும் 2024 மக்களவை தேர்தல் நாட்டின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் வலுப்படுத்துவதாக அமையும் என்று பிரதமரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ஜார்கண்டில் உள்ள ஜாம்ஷெட்பூரில் இன்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், இந்த மாநிலம் இன்னும் வறுமையை காண்கிறது என்றும், மாநிலத்தில் ஆட்சியில் உள்ள ஜேஎம்எம் மற்றும் கூட்டணி கட்சியான காங்கிரஸை அவர் குற்றம் சாட்டினார்.

நரேந்திர மோடி 1 (16)

உலகின் 3 ஆவது பொருளாதார நாடாக இந்தியாவை மாற்றுவதற்கான தேர்தலாக மக்களவை தேர்தல் விளங்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். டெல்லி வடகிழக்கு பகுதியில் பாஜக வேட்பாளர்களை ஆதரித்து நேற்று மாலை தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், இந்தியா வளர்ச்சியின் உச்சத்தை அடைவதற்கு இதுவே சரியான தருணம் என கூறினார்.

ஜி-20 மாநாட்டின் போது தலைநகர் டெல்லியில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு, உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் நகரமான மாற்றப் பட்டதுடன் பாரத் மண்டபம் போன்ற அதிநவீன மாநாட்டு அரங்கங்கள் தேசிய போர் நினைவு சின்னம், புதிய நாடாளுமன்ற கட்டிடம் போன்றவை உருவாக்கப்பட்டதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார். தற்போதைய மக்களவை தேர்தல் இந்தியாவை உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக மாற்றுவதற்கான தேர்தல் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் ஏழை மற்றும் நடுத்தர மக்களை பாதுகாப்பதிலும் தேர்தல் முடிவுகள் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். டெல்லியில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில்

நரேந்திர மோடி 2 (7)

அதனை அழிப்பதிலேயே இந்தியா கூட்டணி கவனம் செலுத்தி வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். ஊழலை ஒழிப்பதாக கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் கோடிக்கணக்கான ரூபாய் முறைகேடு செய்து தற்போது சிறையில் இருப்பதாக அவர் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சியின் 4 தலைமுறையினர் டெல்லியை ஆட்சி செய்து வந்த நிலையில், தற்போது அந்த கட்சி 4 இடங்களில் கூட போட்டியிட முடியாத அளவிற்கு மோசமடைந்துள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

*நிர்மலா* (11)

நாட்டின் நிதி பற்றாக்குறையை சமாளிக்க பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ள செய்தியில், கடன் பிரச்சனையை தீர்க்க அண்மை காலத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார். காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதை

அக்கட்சி நினைத்துப் பார்த்ததுண்டா என்றும், அவர்கள் ஆட்சிக்கு வந்தால் இத்திட்டங்களை செயல்படுத்த, வேறு எந்த நலத்திட்டங்களை கைவிடப் போகிறார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

*ராகுல்காந்தி* (15)

பிரதமர் திரு நரேந்திர மோடி விவசாயிகள் நலனுக்கு எதிராக 3 புதிய சட்டங்களை கொண்டு வந்துள்ள நிலையில் தங்களது கூட்டணி அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் விதமாக 3 உத்திரவாதங்கள் நிறைவேற்றப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக வலைதளப் பதிவில் வெளியிட்டுள்ள செய்தியில், விவசாயிகளின் வாழ்வாதாரம் போன்று கருதப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ உத்திரவாதம் அளித்தல், பயிர் கடன் தள்ளுபடியுடன் ஜிஎஸ்டி வரியில் இருந்து வேளாண் துறைக்கு விலக்கு அளித்தல் மற்றும் பயிர் காப்பீட்டு தொகையை 30 நாட்களுக்குள் வழங்குவது ஆகிய 3 உத்திரவாதங்கள் நிறைவேற்றப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். உரிமைக்காக போராடிய விவசாயிகள் மீது தடியடி நடத்தியதோடு சாலைகளில் ஆணியை பதித்ததை சுட்டிக் காட்டிய அவர், இதற்கு மாறாக

காங்கிரஸ் கட்சி அவர்களது முன்னேற்றத்திற்கான பாதையை ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் தெரிவித்தார்.

*கார்கே* (19)

தேர்தல் பிரச்சாரத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களின் உணர்வுகளை தூண்டி சமூதாயத்தை பிளவுப்படுத்த முயற்சிப்பதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே குற்றம் சாட்டியுள்ளார். மும்பையில் இண்டி கூட்டணி தலைவர்கள் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய திரு மல்லிகார்ஜீன கார்கே, எங்களது கூட்டணி ஆட்சிக்கு வந்தால், ராமர் கோவிலை புல்டோசர் மூலம் தகர்த்து விடுவார்கள் என பிரதமர் பேசியிருப்பதை சுட்டிக் காட்டினார். இதன் மூலம் பிரதமர் மக்களை தூண்டி விடுவதாக அவர் தெரிவித்தார். இது தொடர்பாக தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். மேலும், மகராஷ்டிராவில் மொத்தம் உள்ள 48 தொகுதிகளில் தங்கள் கூட்டணி 46 இடங்களில் வெற்றி பெறும் என்றும் அவர் தெரிவித்தார். தங்களது கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அரசியலமைப்பு உட்பட அனைத்தும் பாதுகாக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். மேலும், 80 கோடி ஏழை மக்களுக்கு மாதந்தோறும் 10 கிலோ ரேஷன் பொருட்கள் இலவசமாக வழங்கப்படும் என்றும் திரு கார்கே தெரிவித்தார். இண்டி கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அதில் திரிணாமுல்

காங்கிரஸ் கட்சியும் அங்கம் வகிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த சந்திப்பின் போது திரு சரத்பவார், திரு உத்தவ் தாக்ரே உள்ளிட்ட கூட்டணி தலைவர்களும் உடனிருந்தனர்.

*தர நிர்ணய ஆணையம்* (7)

பழங்களை பழுக்க வைக்க கால்சியம் கார்பைடு பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ள நிலையில், பழ வணிகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் இதன் பயன்பாட்டை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்று இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் வலியுறுத்தி உள்ளது. இதனால் ஏற்படும் உடல் நல பிரச்சனைகளை தெரிவித்துள்ள ஆணையம், விதிகளை மீறும் பழ வியாபாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை கேட்டுக் கொண்டுள்ளது.

முன்னாள் குடியரசு தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டியின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது. இதனையொட்டி, குடியரசு தலைவர் மாளிகையில்

வானிலை (15)

மாலத்தீவு மற்றும் தெற்கு அந்தமான் கடலில் இன்று தென்மேற்கு பருவ மழை தொடங்கி உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு 3 நாட்கள் முன்னதாகவே பருவ மழை தொடங்கி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனிடையே, தமிழகத்தின் கன்னியாக்குமரி, விருதுநகர், திருப்பூர், கோயம்பத்தூர், நீலகிரி, திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் மிக கன மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவித்துள்ளது. இப்பகுதிகளில் 40 முதல் 45 கிலோ மீட்டர் வரை கடல் காற்று வீசக்கூடும் என்றும், இதனையொட்டி, தமிழ்நாடு கடலோர மாவட்டங்கள், லட்சத்தீவு மற்றும் மாலத்தீவு பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதேபோல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, தஞ்சாவூர், திருவாருர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கடலூர், அரியலூர் உள்ளிட்ட பகுதிகளில் நாளை ஒருசில இடங்களில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாளை நடைபெற உள்ள 5 ஆம் கட்ட வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

6 ஆம் கட்ட தேர்தல் 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 58 தொகுதிகளில் இம்மாதம் 25 ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், அம்மாநிலங்களில் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது.

வரும் 2024 மக்களவை தேர்தல் நாட்டின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் வலுப்படுத்துவதாக அமையும் என்று பிரதமரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவை தேர்தல் சோதனையின் போது, கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் பணத்தின் மதிப்பு, 9 ஆயிரம் கோடியை எட்டும் நிலையில் உள்ளது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

---------